# பொள்ளாச்சி நகராட்சி
# 18 .11.2021 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில்
# நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்
# தீர்மான எண்.3106

3106) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021–ல் வெளிக்கொணர்வு முகமை பணியாளர் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் பேரில் பொள்ளாச்சி நகராட்சிக்கு தேவையான மின் பணியாளர் C சான்றிதழ், மின் பணியாளர் B சான்றிதழ், வடிகட்டி படுகை இயக்குபவர், பராமரிப்பு பணியாளர், ஆய்வக உதவியாளர் நிலை–II, ஓட்டுநர், சுத்தம் செய்பவர் ஆகியோர்களை வெளிகொணர்வு முகமை மூலம் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

புதிய அளவுகோலின்படி தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை விபரம்

| வ. எ ண் | வகை | அளவுகோலின்படி தேவைப்படும் எண்ணிக்கை | தற்போது உள்ள எண்ணிக்கை நிரந்தர பணியாளர்கள் | தற்போது தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர்C சான்றிதழ் | 4 | 2 | 2 |
| 2 | மின் பணியாளர் B சான்றிதழ் | 8 | 1 | 7 |
| 3 | வடிகட்டி படுகை இயக்குபவர் | 6 | 0 | 6 |
| 4 | பராமரிப்பு பணியாளர் | 42 | 15 | 27 |
| 5 | ஆய்வக உதவியாளர் நிலை–II | 2 | 0 | 2 |
| 6 | ஓட்டுநர் | 2 | 1 | 1 |
| 7 | சுத்தம் செய்பவர் | 2 | 2 | 0 |
| | மொத்தம் | **66** | **21** | **45** |

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் பணிகளை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் பராமரிப்பு மேற்கொள்ள உரிய வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதன்பேரில், இந்நகராட்சியின் 36 வார்டு பகுதிகளில் குடிநீர் வழங்கல் பணிகள் திறம்பட செய்திடவும்மேல்நிலை தொட்கள் ஆகிய ,தலைமை நீரேற்று நிலையம் , இடங்களில் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும், மேற்படி பணியாளர்களுக்கு ஒரு வருடத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ130..53 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்கண்ட குடிநீர் வழங்கலுக்கான நபர்களை வெளிகொணர்வு முகமை மூலம் பணி அமர்த்த ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்காகும் செலவினம் ரூ130..53 லட்சத்திற்கும் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. நகராட்சி குடிநீர் வழங்கல் பணிக்கு மேற்காண் தேவைப்படும் நபர்களை வெளிகொணர்வு முகமை மூலம் மின் பணியாளர் C சான்றிதழ், மின் பணியாளர் B சான்றிதழ், வடிகட்டி படுகை இயக்குபவர், பராமரிப்பு பணியாளர், ஆய்வக உதவியாளர் நிலை–II, ஓட்டுநர், சுத்தம் செய்பவர் ஆகிய பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஒரு வருட காலத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.130.53 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத் தொகையை அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மாநில தொகையிலோ அல்லது நகராட்சி குடிநீர் நிதியிலிருந்தோ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 4939/2021/இ1**